[6th February 1959

SRI A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் சிறுபான்மையினரான சமூகத்தினருக்கு மிக அதிகமர்ன அளவில் கிராண்டு வழங்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த சமூகத்தினர் அதிக அனாதை விடுதிகளை நடத்துகிறார்கள் என்பதைத்தான் இது காண்பிக்கிறது. மற்ற விடுதிகளில் அனாதைகள் அதிகமாக இருக்கக்கூடும். ஆனால் இவர்கள்தான் அதிகமான அனாதை விடுதிகளை நடத்துகிறார்கள்.

SRI K. B. S. MANI : அனாதை விடுதிகள் விஷயத்தில் கிருஸ்துவர்கள் தவிர, இந்துக்கள் போன்ற மதத்தினர் நடத்தும் விடுதிகளில் அந்த விடுதிகளில் நிர்வாகிகளின் சொந்தக்காரப் பிள்ளைகளும் வேண்டியவர்களும் அனாதைகள் என்ற பெயரில் பராமரிக்கப்பட்டுவருவது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால் இதன்பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது சம்பந்தமாக கனம் அங்கத்தினரிடம் தகவல் எதாவது இருந்தால் அதை சர்க்காரிடம் அவர் தெரிவிப்பாரானால், அதன்பேரில் நடவடிக்கை எடுக்கலாம்.

SRI A. A. RASHEED : Is there any proposal to increase the grant to these orphanages?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது இப்போது தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. அது முன்பு 8 ரூபாயாக இருந்தது. 1—10—1958-லிருந்து அதை 2 ரூபாய் உயர்த்தி 10 ரூபாயாகக் கொடுத்துவருகிறோம்.

Government dispensaries in South Arcot district

* 67 *Q.*—SRI A. GOVINDASAMY (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of dispensaries run by the Government in the South Arcot district; and

(*b*) the number of Medical Officers in charge of them?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Three, Sir.
(*b*) One in charge of each dispensary.

SRI A. GOVINDASAMY : கண்டமங்கலத்தில் சர்க்காரால் நடத்தப்பட்டு வந்த ஆஸ்பத்திரியானது தற்சமயம் மூடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் திறக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது வேறு விஷயம் அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

Commercial Taxes Department

* 68 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Deputy Commercial Tax Officers and Commercial Tax Officers employed in the Commercial Taxes Department on or after the 27th August 1958?

6th February 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : Presumably the Member wants to know the number of posts of Deputy Commercial Tax Officers and Commercial Tax Officers in the Commercial Taxes Department after the reorganisation of the department ordered in a Government Order, dated the 27th August 1958, was given effect to from the first October 1958. There are 164 posts of Deputy Commercial Tax Officers, 20 posts of Joint Commercial Tax Officers and 17 posts of Commercial Tax Officers in the Commercial Taxes Department.

SRI N. K. PALANISAMI : இந்த இலாகாவில் ரீஆர்கனைஸேஷனுக்கு பிறகு அதனால் பாதிக்கப்பட்ட க்ளார்க்குகள் போன்றவர்களுக்கு வேறு எதாவது மாற்று வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த மாதிரி பாதிக்கப்பட்டதாக, யாரும் என்னிடம் வந்து இதுவரை சொல்லவில்லை. அவர்கள் அவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்தால் அது உடனடியாக கவனிக்கப்படும்.

SRI A. V. P. ASAITHAMBI : விற்பனை வரி முறையில் சிறிது மாறுதல் ஏற்பட இருப்பதால், இப்பொழுது இருப்பவர்கள் குறைக்கப்படுவார்களா, அல்லது கூட்டப்படுவார்களா அல்லது இப்பொழுதுள்ளதே போதுமானதென்று அரசாங்கம் கருதுகிறதா? 9-50 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : விற்பனை வரி முறையை மாற்றியமைப்பதற்காக டாக்டர் லோகநாதன் அவர்கள் செய்த சிபார்சுகளில் சில சட்டபூர்வமாக அமுல் நடத்தவேண்டியதாகவும், சில நிர்வாக பூர்வமாக நடத்தவேண்டியதாகவும் இருக்கின்றன. நிர்வாக பூர்வமாக நடத்தக் கூடியவை 1—10—58-லிருந்து அமுலுக்கு வந்துவிட்டது. அதனால் ஓரளவு ஆள் குறைப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேறு இடங்களில் வேலை பார்த்துக் கொடுத்துக் கொண்டும் இருக்கிறோம்.

SRI N. K. PALANISAMI : கமர்ஷியல் டாக்ஸ் டிப்பார்ட்மெண்ட் ரீஆர்கனைஸேஷன்போது 143 பியூன்களும், 150 லோயர் டிவிஷன் க்ளார்க்குகளும், 11 பில் கலெக்டர்களும் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அதற்கு மேலாக இப்பொழுது புதிதாக 800-1,000 ரூபாய் சம்பளத்தில் ஒரு டெப்டி கமெர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர் போடப் பட்டிருக்கிறார்கள். அப்படியானால் மேல் இருக்கக் கூடிய உத்தியோகஸ்தர்களை அதிகப்படுத்துவதும் கீழே இருக்கக் கூடியவர்களை "ரிட்ரென்ச்" செய்வதும்தான் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமா?

THE HON. SRI R. VENKATARAMAN: அங்கத்தினர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்கள் அவ்வளவும் தவறு. இதனால் பாதிக்கப்பட்ட நாலாவது கிரேட் ஊழியர்கள் 205, நேற்று கொடுத்த புள்ளிவிவரப்படி அவர்களில் 134 பேர்களுக்கு வேலை கொடுத்தாகிவிட்டது. இன்னும் 74 பேருகளுக்கு வேலை கொடுக்கப்படும். இரண்டாவதாக, அதிகப்படி சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களை அதிகமாக வைத்திருப்பதாகச் சொல்வதும் தவறு. இப்பொழுது இந்த இலாகாவில் உள்ள உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு போதுமான பிரமோஷன் கிடைக்கவில்லை என்று சொல்லும் நிலைதான் இருக்கிறது. அதை சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள். இந்த இலாகாவிற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு பேர்கள்தான் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். புதிதாக யாருக்கும் 800—1,000-ல் ஒரு உத்தியோகம் கொடுக்கவில்லை. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு பிரிவு, ஜாயிண்ட் கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர்ஸ் என்பது. அவர்களுக்கு சம்பளம், 300—450 ஆகும்.

[6th February 1959

SRI V. SANKARAN : ரீஆர்கனேஷேஷனுக்குப் பிறகு எத்தனை எ. ஸி. டி. ஒக்கள் க்ளார்க்குகளாக மாற்றப் பட்டார்கள்.?

THE HON. SRI R. VENKATARAMAN : தனி கேள்வி வேண்டும்.

SRI A. GOVINDASAMY : அவுட்போஸ்டில் போட்டிருப்பவர்கள் அத்தனை பேர்களும் கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்களா அல்லது வேறு டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்களேயும் போட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு இலாகாக்களிலிருந்து போடப் பட்டிருக்கிறார்கள். கமர்ஷியல் டாக்ஸ் டிப்பார்ட்மெண்டில் இருந்தும், டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்டிலிருந்தும் போடப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில் லாரிகளில் சாமான்களேக் கொண்டு போவதாக புகார்கள் வந்தால் அதை செக் செய்ய டிரான்ஸ்போர்ட் அதிகாரிகளும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

SRI S. LAZAR : பாதிக்கப்பட்ட நாலாவது கிரேட் உத்தியோகஸ்தர்களை திரும்ப வேலைக்கு அமர்த்துகிற போது ஏற்கனவே வேலையில் இருக்கக் கூடியவர்களை நீக்கி விட்ட இவர்களை நியமிப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? அப்படி நீக்கப்படுபவர்களுக்கு வேண்டிய வழிவகைகள் செய்து கொடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு வருடத்திற்கு குறைவாக இருக்கக்கூடியவர்கள் டெம்பரரி சர்வீஸைச் சேர்ந்தவர்கள். ஆகவே, பர்மனெண்ட் சர்வீஸில் இருந்து ஆள் குறைப்பு ஏற்படும்போது டெம்பரரி சர்வீஸில் உள்ளவர்களை போகச் சொல்லிவிட்டு பர்மனெண்ட் சர்வீஸில் உள்ளவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. 2, 3, 4 மாத டெம்பரரி சர்வீஸில் உள்ள நாலாவது கிரேட் ஊழியர்களை நீக்கிவிட்டு இவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது.

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது அவுட்போஸ்ட்களில் டிரான்ஸ்போர்ட் இலாகாவைச் சார்ந்தவர்களேயும் நியமிப்பதாகச் சொன்னார்கள். டிரான்ஸ்போர்ட் இலாகாவிலுள்ள பொறியியல் வல்லுவர்களை நியமித்து திறமையுள்ளவர்களை பயனற்ற துறையில் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக வர்த்தகவரி இலாகாவைச் சேர்ந்தவர்களைமட்டுமே இந்த அலுவல்களில் ஏற்படுத்த அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுதுள்ள சட்டபடி வர்த்தகவரி இலாகாவைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு மோட்டார் வெஹிகளை நிறுத்துவதற்கோ அல்லது அதை பரிசீலனை செய்வதற்கோ அதிகாரமில்லை. ஆகவே டிரான்ஸ்போர்ட் இலாகாவைச் சேர்ந்தவர்களை நியமித்து பரிசீலனை செய்வதற்கு போட்டிருக்கிறார்கள். இதில், சர்க்காருக்கு அதிகமான லாபம் இருக்கிறது. திறமையுள்ள உத்தியோகஸ்தர்களை அங்கு போடுவதால் நமக்கு வருவாய் இப்பொழுது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வெளியில் ஏமாற்றிக் கொண்டு கள்ளக்கடத்தல் செய்வது கூட ஓரளவு தடுக்கப்படுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : ஆள் குறைப்பு செய்கிற போது ஒரு வருடத்திற்கு மேம்பட்டவர்களை நீக்கிவிட்டு பின்னர் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படுவதாக கூறினார்கள். ஆரம்பத்திலே இது பற்றி ஒரு முடிவு எடுத்திருக்கக் கூடாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படித்தான் செய்யப்பட்டிருக்கிறது. டெம்பரரி உத்தியோகத்தில் இருப்பவர்களின் காலம் முடிந்து விட்டாலும் அல்லது காலி ஸ்தானம் இல்லாவிட்டாலும் அனுப்புவது என்பது எல்லாயிடங்களிலும் ஒத்துக் கொள்ளப்பட்ட முறை. ஆகவே இதில் தவறு ஒன்றுமில்லை.